Register No. [ | | | | | | | ]

**FA3D**

**5207–22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five – year Regular Course)

Second Year – Third Semester

LAW OF CONTRACTS – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'offer' and examine the essentials of a valid offer.

   'முனைவு' என்பதினை வரையறுத்து ஓர் செல்லத்தக்க முனைவின் இன்றியமையாத கூறுகளை ஆராய்க.

2. Explain how far contracts entered into by the minor are enforceable by and against the minor.

   இளவரால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை எந்த அளவிற்கு இளவராலோ அல்லது அவருக்கு எதிராகவோ வலியுறுத்திச் செயல்படுத்த முடியும் என்பதை விளக்கவும்.

3. State the circumstances in which a contract without consideration may be treated as valid.

   மறுபயனில்லாத ஒப்பந்தம் செல்லத்தக்க உடன்பாடாகக் கருதப்படும் சூழ்நிலைகளை எடுத்துக் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answers TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Show how far misrepresentation will vitiate free consent of parties. Refer to leading decisions.

   திரித்துக் கூறுவது எவ்வாறு தன்னிச்சையான இசைவு கொடுத்தவர்களைப் பாதிக்கிறது? தலையான தீர்ப்புகளை குறிப்பிடுக.

5. "No one shall enrich himself unjustly at the expense of another" – How far this principle is given effect in the Indian Contract Act?

"அடுத்தவர் செலவில் நேர்மையற்ற முறையில் ஒருவர் தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளலாகாது" – இக்கொள்கையானது இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகிறது?

6. "A stranger to contract cannot sue". State the exceptions to the said rule.

"ஒப்பந்தத்திற்கு அப்பாற்பட்டவர் ஒப்பந்த தரப்பினர் மீது எந்த சூழலிலும் வழங்கிட முடியாது". இக்கூற்றிற்கான விதிவிலக்குகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Quantum Meruit
பணித்தகு தொகை

(b) Past consideration
கடந்தகால மறுபயன்

(c) Non est factum
ஆவண பிழை வாதம்

(d) Nominal damages
பெயரளவு இழப்பீடு

(e) Blue pencil rule
நீல பென்சில் விதி

(f) Tender of performance
நிறைவேற்ற அளிப்பு முனைவு

(g) Lawful consideration
சட்டப்பூர்வ மறுபயன்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a mother, gifted her properties to her daughter 'B'. In turn 'B' has promised to pay a fixed amount yearly to her maternal uncle 'C'. After A's death, 'B' stops payment to 'C'. Whether 'C' can file a case against 'B'? Discuss.

'அ' என்ற தாயார், தன்னுடைய சொத்துக்களை தன்னுடைய மகளான 'ஆ' என்பவருக்கு கொடையாக எழுதிவிட்டார். அதற்கு பதிலாக 'ஆ' ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை தன்னுடைய தாய்மாமனான 'இ'க்கு கொடுக்க உறுதியுரை, செய்தார். ஆனால் 'அ' இறந்த பின்பு 'ஆ', 'இ'க்கு பணம் தருவதை நிறுத்திவிட்டார். 'இ', 'ஆ' விற்கு எதிராக வழக்கு தொடர முடியுமா? விவாதிக்கவும்.



9. A tenant pays house property tax to the corporation, otherwise the property would be sold and he would be evicted by the corporation. Can he recover it from the house owner? Decide.

வாடகைக்கு இருப்பவர் வீட்டுச் சொத்து வரியினை மாநகராட்சிக்கு தானே கட்டுகிறார். ஏனெனில் கட்டவில்லையென்றால் மாநகராட்சி அச்சொத்தை விற்கும். இதனால் இவர் வெளியேற்றப்படுவார். இவ்வாடகைதாரர் வரிப்பணத்தை வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்க இயலுமா? தீர்மானிக்க.

10. At the time of partition of the family property it was agreed that two male members 'A' and 'B' will bear the marriage expenses of 'C' the female member of the family. 'A' and 'B' fail to fulfil the promise. Provide legal advice to 'C'.

குடும்பச் சொத்தினை பாகப்பிரிவினை செய்யும் போது ஆண் உறுப்பினர்களாகிய 'அ' மற்றும் 'ஆ' என்பவர்கள் பெண் உறுப்பினரான 'இ'ன் திருமணச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒப்புக் கொண்டார்கள். ஆனால் 'அ' மற்றும் 'ஆ' தங்களது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுகின்றனர். 'இ' என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.